# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎: 044 – 26490183
: 9444701953

*11/29, திருமால் நகர் விரிவாக்கம்* II,
*8-வது குறுக்குத் தெரு, பூந்தமல்லி,*
*சென்னை* – 600 056.

## பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள்.

1. பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாகுதலினாலே, கீழ்ப்படிதலுக்கு தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவங்களாயுள்ள பரிசுத்தவான்களுக்கு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்கு பெருகக்கடவது.

2. தேவன் என் உள்ளத்தில் வைப்பதை நான் அவ்வப்போது உங்களுக்கு என் வாயின் வார்த்தைகள் வாயிலாக பிரசங்கிக்கவில்லை அல்லது என் கரங்களைக் கொண்டு எழுத்துக்கள் வாயிலாக உங்களுக்கு நிருபங்களை, செய்தி தொகுப்புகளை எழுதவில்லை என்றால் எனக்கு ஐயோ! அதே நேரத்தில் நான் பிரசங்கிப்பதை, எழுதுவதை சிலர் மாத்திரமே ஏற்றுக்கொள்வார்கள். விசுவாசிப்பார்கள். ஏனென்றால் இருபது லட்சத்தில் இரண்டு பேர் திருஷ்டாந்தத்தை நான் நன்கு அறிவேன். மேலும் ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதை கண்டுப்பிடிப்பவர்கள் சிலர். பலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். விசுவாசிக்கமாட்டார்கள். ஏனென்றால் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதன் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். தியானியுங்கள் மத்.7:13,14. ஆக இதையெல்லாம் நான் தாங்கிக்கொள்ளதான் வேண்டும். எனக்கு நெருக்கமான குடும்பத்தினர் அடிக்கடி என்னிடம் ஏன் சகோதரனே உங்களை பெரும்பாலானோர் வெறுக்கிறார்கள் என்று கேட்பார்கள். தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது. இதைத்தவிர வேறு நான் என்ன கூறமுடியும்?

3. எப்பொழுதுமே என் உள்ளத்தில் தேவன் வைப்பதை நீங்கள் கடந்த 28 ஆண்டுகளாக பெற்று வரும் செய்தித் தொகுப்புகளின் வாயிலாக அது நன்மையானலும், தீமையானலும் சரி ஒன்றையும் மறைக்காமல் உங்களுக்கு எழுதி என்னை அவ்வப்போது முற்றிலுமாக வெறுமையாக்கி வருகிறேன். கர்த்தர் நமக்கு நடுவே சத்தியமும் உண்மையுமான சாட்சியாயிருக்கிறார். நான் எழுதிவரும் செய்தித் தொகுப்புகள் யாவும் முற்றிலுமாக விசுவாசிகளுக்கே. ஆம், தேவனுடைய வித்துகளுக்கே. கெட்டுப்போகிறவர்களுக்கு இது 100க்கு 100 சதவீதம் பைத்தியமாகவே இருக்கும். விபரீதமாகவே இருக்கும். என் கரங்களின் வாயிலாக நான் எழுதி வருபவைகள் நிச்சயமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவங்களாயிருக்கிறவர்களுக்கு ஜீவனாயிருக்கும். ஆமென்.

**I. பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் வேதவாக்கியங்களில் வெளிப்பாடற்ற காயீனின் உபதேசம்.**

4. ஸ்தாபன சபைகள் சோரமார்கமாய் பின் பற்றுகிற இந்த விபரீதமான போதனைக்கு உங்கள் செவிகளை விளக்கி உங்களை காத்துக்கொள்ளுங்கள். சமீப நாட்களில் நான் ஒரு ஸ்தாபன சபையை சார்ந்த ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை சந்திக்க கர்த்தர் சித்தம் கொண்டார். அவர்களுடைய தாழ்மை என்னை முற்றிலும் கவர்ந்தது. அவர்களை சத்தியத்திற்குள் வழிநடத்தி, அவர்கள் குடும்பத்தோடு ஐக்கியம் கொள்ள நினைத்தேன். ஆதலால் நான் அவர்களிடம் ஒரே ஞானஸ்நானத்திற்கடுத்த காரியங்களை பேசலானேன். அவர்கள் இயேசு சீஷர்களை நோக்கி: பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று மத்.28:19ல் கட்டளையிட்டிருக்கிறாரே, நீங்கள் அப்.2:38 ன் படி இயேசு கிறிஸ்து நாமத்தினாலே அப்போஸ்தலர்கள் உபதேசத்தின் படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுவது நியாயமா? இயேசு அப்பாவுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமா அல்லது அவருடைய அப்போஸ்தலர்களுக்கு கீழ்ப்படிய வேண்டுமா? அப்போஸ்தலர்களைவிட நமக்கு இயேசு அப்பா தானே முக்கியம் என தங்கள் அறியாமையினால் என்ன, ஏது பேசுகிறோம் என சிந்தியாமல் ஏதோ ஏதோ தங்கள் மனம் போனபோக்கில் பிதற்றினார்கள். நான் அவர்கள் அறியாமையை நீக்க முயற்சித்தேன்.

5. இயேசு; பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டது உண்மை தான். அதாவது அவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் உரிய நாமத்திலே அதாவது பெயராலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். நீதி.30:4ன் படி பிதாவுக்கும் நாமம்/ பெயர் உண்டு. குமாரனுக்கும் நாமம்/பெயர் உண்டு. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இது எவ்வாறு என்று அநேக வேதவாக்கியங்களைக் கொண்டு அவர்களுக்கு திருஷ்டாந்தப்படுத்தினேன். இயேசு கட்டளையிட்டபடி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். கர்த்தர் அதை அங்கீகரித்தார் என அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினேன்.

6. இயேசு 11 சீஷர்களிடம் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டார். இயேசு கொடுத்த இந்த கட்டளையை சுவிசேஷகனாக மத்தேயு தன்னுடைய சுவிசேஷத்தில் 28வது அதி.19 வசனத்தில் எழுதி வைத்துள்ளான். ஆனால் அப்போஸ்தலனாகிய பேதுரு, பெந்தெகொஸ்தே நாளன்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றான். அப். 2:38 அவனுடைய பிரசங்கத்தினால் இருதயத்தில் குத்தப்பட்டு, வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்ட 3000 பேர் அன்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அப். 2:41. பெந்தெகொஸ்தே நாளில் இந்த சம்பவம் நடந்தது. அன்று தான் முதல் முதலாக சபை உருவாகியது. அப்படியானால் நாங்கள் பெந்தெகொஸ்தேயினர் என்று கூறிக்கொண்டு, பெந்தெகொஸ்தே நாளில் சபை உருவாகிய முறைமைகளை மறுதலிக்கும் கூட்டத்தினர் யார்? நிச்சயமாக அவர்கள் பிசாசின் கூட்டத்தினரே.

7. பெந்தெகொஸ்தே நாளில் இந்த சம்பவம் நடந்த போது, இயேசுவிடமிருந்து பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று பெற்ற கட்டளையை எழுதி வைத்த மத்தேயுவும் அங்குதான் இருந்தார். அப்.1:13. அதோடு மட்டுமல்லாமல் அங்கு சீஷர்கள் ஏறக்குறைய 120 பேர் கூடியிருந்தார்கள். அவர்கள் பேதுருவை

நோக்கி: அன்பு சகோதரனே, இயேசு நம்மிடம் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்க கட்டளையிட்டிருக்க நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என பிரசங்கித்துவிட்டீர்களே, இது நியாயமா? இயேசுவின் கட்டளையை மீறிவிட்டீர்களே என்று தட்டிக்கேட்கவில்லை. வாக்குவாதமும் செய்யவில்லை. ஏன்? அவர்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வெளிப்பாட்டை பரிசுத்த ஆவியினால் பெற்றிருந்தார்கள். சத்திய ஆவி அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தினார். அது தான் காரியம். அல்லேலூயா! பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். மத். 11:27. இதுதான் காரியம். பிதா யார்? குமாரன் யார்? பிதா நாமம் என்ன? குமாரன் நாமம் என்ன? என்ற வெளிபாட்டை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் பெற்றிருந்தார்கள். இந்த வெளிப்பாட்டை ஸ்தாபன சபைகளும், அவைகளின் ஊழியக்காரர்களும் பெறவில்லை. ஏனென்றால் அவைகள் சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து இயங்கி வருகிறது.

8. இந்த வெளிப்பாட்டை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கே தேவன் வெளிப்படுத்துகிறார். மத்.11:25. நிச்சயமாக இந்த வெளிப்பாடு M.Com களுக்கும், M.Phil களுக்கும், B.D களுக்கும், B.Ed. களுக்கும், B.Th களுக்கும் கிடைக்காது. அவர்களுக்கு ஒருக்காலும் புரியாது. அப்போஸ்தல சபை என பெயர் வைத்துக்கொண்டு அப்போஸ்தல உபதேசங்களை (எபே: 2:20) மறுதலிக்கிறவர்களுக்கு எப்படி இந்த வெளிப்பாடு கிடைக்கும்? தேவனுடைய சபை என்று கூறிக்கொண்டு தேவனுடைய வார்த்தையை புறக்கணிக்கிறவர்களுக்கு இந்த வெளிப்பாடு எப்படி கிடைக்கும்? ஒருக்காலும் கிடைக்காது. பாலகருக்கு தேவன் வெளிப்படுத்தினபடியால் நான் அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

9. அடுத்த சம்பவத்தைப் பாருங்கள். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசு கட்டளையிட்டார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பெந்தெகொஸ்தே நாள் அன்று ஞானஸ்நானம் பெற்ற 3000 பேரையும் இரட்சிக்கப்பட்டவர்கள் என இயேசு அழைக்கிறார். இவ்வாறாக அவர்களை குறித்து சாட்சிக்கொடுத்து, அவர்களை தம்முடைய சரீரமாகிய சபையில் அவயவங்களாக சேர்த்துக்கொண்டார். அப்.2:47. இயேசு, அப்போஸ்தலர்களை நோக்கி: இதோ பாருங்கள், நான் உங்களை பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்க சொல்லி கட்டளையிட்டேன், ஆனால் நீங்களோ அதிகபிரசங்கிகளாக இருந்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து என் கட்டளையை மீறிவிட்டீர்கள். இப்பொழுது நான் உங்கள் உபதேசத்தின்படி ஞானஸ்நானம் பெற்ற 3000 பேரையும் என் சரீரமாகிய சபையிலே சேர்த்துக் கொள்ளமாட்டேன், நீங்கள் கொடுத்த ஞானஸ்நானம் தவறு, நான் இதை அங்கீகரிக்கமாட்டேன் என்று கூறவில்லை. மாறாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களே இரட்சிக்கப்பட்டவர்கள் என கூறி, அவர்கள் பெற்ற ஞானஸ்நானத்தை அங்கீகரித்தார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களை தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார் அப்.2:47. ஏன்? பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வெளிப்பாட்டை அப்போஸ்தலர்களுக்கு கொடுத்தார். நம் மத்தியில் உள்ள பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபைகளுக்கு கொடுக்கவில்லை. அப்போஸ்தல கிறிஸ்தவ சபைகளுக்கும், தேவ சபைகளுக்கும் கொடுக்கவில்லை. ஏன்? அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்ளாகவும் இருக்கும்படிக்கும், தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை அறியாதபடிக்கும் இருக்கத்தக்தாக தேவன் அப்படி செய்தார். (மாற். 4:11,12) ஆம், தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும், தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். தீத்.1:3. அந்த குடும்பத்தார் தேவனுடைய மந்தையில் இல்லாத ஆடுகளாக இருக்கும் போது சத்தியத்தை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? ஏனென்றால் இயேசு என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறது என்றார். யோ.10:27. அப்போஸ்தல சபை ஆடு அப்போஸ்த சபைக்கு தான் செவி கொடுக்கும். அது தேவனுக்கு செவிக்கொடுக்காது.

10. நான் அந்த ஸ்தாபன சபை விசுவாசிகளுக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம்/பெயர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, ஆதலால் அப். 2:38 ன்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என உபதேசித்தேன். முதலில் சரி என்று கூறியவர்கள், பின் தங்கள் இருதயத்தை பிறர் தூண்டுதலினால் கடினப்படுத்திக்கொண்டார்கள். நான் ஞானஸ்நானத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தேன். ஆனால் சாத்தான் பின்மாற்றத்தை அவர்கள் உள்ளத்தில் கொண்டுவந்து, என் முயற்சிகள் பலனற்றுப்போகச் செய்தான். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. உலக தோற்றத்திற்கு முன்னே ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் வெகு சிலர் மாத்திரமே இருப்பார்கள். ஏனெனில் எகிப்திலிருந்து இருபது லட்சம் பேர் புறப்பட்டனர். அதில் காலேப், யோசுவா ஆகிய இருவர் மட்டுமே கானான் தேசத்திற்குள் பிரவேசித்தனர். மற்றவர்கள் வனாந்தரத்தில் அழிந்தார்கள். ஏனென்றால் எகிப்திலிருந்து வெளிவந்த அநேகரிடத்தில் தேவன் பிரியமாக இல்லை. தேவனுடைய வார்த்தையின் உண்மையான வெளிப்பாடு ஒருவருடைய இருதயத்தை தொடும்பொழுது கன்மலை பிளந்து தண்ணீர் புரண்டு வருவது போன்று பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இருதயத்தை பிளப்பதினால், புதிய ஜீவன் அவர்கள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும். அதை யாருமே நிறுத்த முடியாது. பாருங்கள் தேவனுடைய வார்த்தையின் உண்மையான வெளிப்பாடை பெற்ற ஒருவரை அவருடைய அக்காளும், அத்தானும், அத்தையும் நிறுத்த முடியவே முடியாது.

11. அடுத்து அப்.19 அதி. கொண்டு நீங்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றது சரியான ஞானஸ்நானம் அல்ல, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குரியவர் பெயரில், அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றேன். மேலும் நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றால் அது நீங்கள் இரண்டாவது முறையாக எடுக்கும் ஞானஸ்நானம் ஆகாது. ஏனென்றால் ஒருவர் தவறான முறையில் எடுத்த ஞானஸ்நானம், ஞானஸ்நானம் ஆகாது. சரியான முறையில் ஒருமுறை எடுக்கும் ஞானஸ்நானமே ஒரே ஞானஸ்நானம் எனப்படும் என்று அறிவுரைகளை எடுத்துக்கூறியும் அதற்கு செவித்தினவுள்ளவர்களாகிவிட்டார்கள். சத்தியம் தள்ளுபடியாயிற்று.

12. வானத்தின் கீழ்மெங்கும், மனுஷர்களுக்குள்ளே நாம் இரட்சிக்கப்படும்படிக்கு கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (அப்: 4:12) பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமம் இல்லை. அதில் இரட்சிப்புமில்லை. இரட்சிப்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே உள்ளது. மேலும் நாம் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதை செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்யவேண்டும். (கொலே. 3:17). ஞானஸ்நானம் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை (1பேது 3:21) அந்த உடன்படிக்கையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் செய்யவேண்டும். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்தவின் நாமத்தினால். உங்கள் பாவ மன்னிப்புக்காகவும், உங்கள் இரட்சிப்புக்காகவும் ஞானஸ்நானம்

பெற்றுக்கொள்ளுங்கள் என்ற எனது மெய்போதகத்தை அவர்கள் உதாசினப்படுத்தினார்கள். தேவன் அவர்கள் இருதயத்தை பார்வோனுடைய இருதயத்தை போன்று கடினப்படுத்தினார்.

13. பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாடு மத்தேயு முதல் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் வரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களுக்கு, கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்களுக்கு (கலா 3:27) எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக கொரிந்தியரை எடுத்துக்கொண்டால் அன்று கொரிந்து பட்டணத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு எழுதப்பட்டது. அப்படியே பிலிப்பியர் பிலிப்பி (Philippi) பட்டணத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு எழுதப்பட்டது. ஆக புதிய ஏற்பாடு புத்தகத்தை கரங்களில் பிடித்துக்கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கொடுக்கும் ஞானஸ்நானத்தை புறக்கணிக்கும் ஸ்தாபன சபைகளே, அவைகளின் போதகர்களே உங்களுக்கு ஐயோ! மனுஷர் பிரவேசிக்காதபடி பரலோக இராஜ்யத்தை பூட்டி போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதில்லை, பிரவேசிக்க போகிறவர்களை பிரவேசிக்க விடுவதுமில்லை. காரியம் இப்படியிருக்க ஸ்தாப சபைகளை ஆவிக்குரிய சபை எனவும், அதின் போதகர்களை ஆவிக்குரிய பரிசுத்தவான்கள் எனவும் அழைக்கும் வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாதவர்களை குறித்து என்ன சொல்வது? குருடர்களே குருடர்களுக்கு வழிக்காட்டியாக இருக்கிறார்கள். உங்கள் இருவர் நிலையும் அந்தோ பரிதாபம்!

14. பரிசுத்த வேதாகமத்தில் எந்த ஒரு விசுவாசியும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றதாக ஆதாரங்கள் இல்லை. இது ஸ்தாபன சபைகளின் உரிமையாளனாகிய அந்திக்கிறிஸ்துவின் போதனை. ஏனென்றால் ஸ்தாபன சபைகள் யாவும் பிசாசினுடையதே! பாருங்கள் ஸ்தாபன சபை விசுவாசிகளுக்கும் தேவனுடைய வார்த்தை மீது, அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் உபதேசங்கள் மீது (எபே.2:20) நாட்டம் இல்லை. அவர்களுக்கு அவர்கள் பாஸ்டர்கள் போதனையே வெளிச்சமாக உள்ளது. ஜனங்கள் இவர்களை நம்பி மோசம் போகிறார்கள். மோசம் போகிறதற்கென்று நியமிக்கப்பட்டவர்களே ஸ்தாபன சபைகளை சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள்.

15. ஒருவருடைய இரட்சிப்பு அப். 2:38 ல் தான் உள்ளது. இந்த இரட்சிப்பை ஒருவர் பெற்றுக்கொள்ளாதபடிக்கு சாத்தான் ஸ்தாபன சபைகளை ஆட்கொண்டு அதின் ஊழியக்காரர்களைக் கொண்டு மக்களை வஞ்சிக்கிறான். வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத, தாழ்மை சிந்தையுடைய அநேக மக்கள் சாத்தானுடைய மந்தையின் ஆடுகளாக இருந்து தங்கள் இரட்சிப்பை இழந்து போகிறார்களே என்பதை காணும்போது என் மனதுக்கு மிகவும் சஞ்சலமாயிருக்கிறது.

16. ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என விசுவாசிப்பதினால் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளமுடியாது. ஏனென்றால் விசுவாசமுள்ளவனாகி, அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும். (அப்.16:31, மாற். 16:16, அப்.2:38) ஒருவர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் அவர் இரட்சிக்கப்படவில்லை. ஏனெனில் அவர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமமாகிய/ பெயராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினலே ஞானஸ்நானம் பெற வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற நாமமே இரட்சிப்புக்கு கொடுக்கப்பட்ட ஒரே நாமம் / பெயர் (அப்4:12). பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பது பதவிகளின் பெயர், பட்டப்பெயர். பிதா என்பது பெயரல்ல. குமாரன் என்பது பெயரல்ல. பிதாவுக்கு பெயருண்டு. குமாரனுக்கு பெயருண்டு. பரிசுத்த ஆவிக்கு பெயருண்டு. பிதா குமாரன் பரிசுத்தஆவியின் பெயராலே அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கவே இயேசு கட்டளையிட்டார். அதற்கு அப்போஸ்தலர்கள் கீழ்படிந்தார்கள். நாமும் அவ்வண்ணமாகவே கீழ்படிய வேண்டும். **வானத்தின் கீழே பூமி மேலே, வானவர் இயேசு நாமம் அல்லால், இரட்சிப்படைய வழியில்லையே, இரட்சகர் இயேசு வழி அவரே** என வாய் கிழிய பாடுகிறீர்களே, அதன் அர்த்தத்தை புரிந்து ஆவியோடும் கருத்தோடும் பாடுகிறீர்களா? இந்த குடும்பத்தினருடைய கண்கள் திறக்கப்பட வேண்டிய ஒரு நேரம் எப்பொழுதாவது இருந்திருக்குமானால் அது அவர்கள் இதை வாசிக்கும் நாள் தான்.

17. ஒருவர் வெள்ளிக்கிழமை உபவாசக்கூட்டத்தில் பங்கு பெறுவதால், கன்வென்ஷன் கூட்டங்களுக்கு சென்றுவருவதால் இரட்சிக்கப்படமுடியாது. மாறாக ஒருவர் மனந்திரும்பி, தன் பாவ மன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறாவிட்டால் அவர் இரட்சிக்கப்படவேமுடியாது. காரியம் இப்படி இருக்கும்பொழுது ஒரு இரட்சிக்கப்படாத குடும்பத்தில் நான் எப்படி ஐக்கியம் கொள்ள முடியும்? முடியாதே! சத்தியமும் தவறும் ஒன்றோடொன்று கலவாது, பாருங்கள். மரணத்தையும், ஜீவனையும் ஒன்று சேர்ந்து வைக்க முடியாது.

18. பிசாசுகளை ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் விரட்டும் பொழுது சாத்தான் அதை கண்டு கொள்ளமாட்டான். வியாதிகளை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் சுகமாக்கும் பொழுது பார்த்தும் பார்க்காததுபோல் இருந்துவிடுவான். ஆனால் அவன் மந்தையிலுள்ள ஒரு ஆடு, அவன் மந்தையை விட்டு தேவனுடைய மந்தைக்கு மட்டும் செல்வதை ஒருக்காலும் விரும்பவே மாட்டான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஒருவர் ஞானஸ்நாம் எடுக்கும்பொழுது அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சரீரத்தில் அவயவமாகிறார். இதை சாத்தான் ஒருக்காலும் விரும்பமாட்டான். ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்பொழுது இரட்சிக்கப்பட்டவராய் பிசாசின் கட்டுகளில் இருந்து விடுதலை ஆகிறார். தேவனுடைய குமாரனும் குமாரத்தியுமாகிறார். இதை சாத்தான் அனுமதிப்பானா? விரும்புவானா? ஒருக்காலும் அனுமதிக்கமாட்டான். அதை ஒருக்காலும் விரும்பவும்மாட்டான். உங்கள் அனைத்து காரியங்களையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் செய்ய அனுமதிப்பான். ஆனால் ஞானஸ்நானம் மட்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் எடுக்க விடமாட்டான். ஏனென்றால் இரட்சிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தானே உள்ளது.

19. இந்நாட்களில் எங்கு சென்றாலும் மக்கள் தாங்கள் சார்ந்துள்ள சபைகளுக்கும், அவைகளின் பாஸ்டர்களுக்குமே செவிகொடுக்க விரும்புகிறார்கள். தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு நிந்தையாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தை மீது அவர்களுக்கு வாஞ்சை இல்லை. தங்கள் சபை, பாஸ்டர் போதனைகளை அவர்கள் தேவனுடைய வார்த்தையோடு சரிபார்த்து கொள்வதில்லை. ஆராய்ந்து பார்ப்பது இல்லை. இது என்ன? ஆவிக்குரிய குருட்டுத்தன்மை. இந்த சுபாவம் தான் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளோம். நாங்கள் மணவாட்டி என பெருமை பாராட்டி கொள்ளும், மக்கள் மத்தியிலும் காணப்படுகிறது. இவர்களும் தங்கள் பாஸ்டர்களுக்கே செவிகொடுக்க விரும்புகிறார்கள். வேதவாக்கியங்களைக் குறித்து இவர்களுக்கு அக்கறை இல்லை. இக்காலத்துக்குரிய செய்தியை குறித்தும் இவர்களுக்கு கவலை இல்லை. இவர்கள் தங்கள் பாஸ்டர்களுடைய வெளிப்பாடுகளே போதும், போதும் என்கிறார்கள். இதனால் தான் எங்கும் எதிலும் அந்நிய போதனைகள் காணப்படுகின்றன. மக்களும் அந்நிய போதனைகளுக்கே அதிகம் செவிகொடுக்கிறார்கள். ஏனென்றால் இருபது லட்சம் பேர்கள் மத்தியில் இரண்டு பேர்

என்ற திருஷ்டாந்தம் நிறைவேற வேண்டுமே! இது சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு செவிகொடுக்கும் காலம். கொடிதான வஞ்சிப்பின் காலம்.

20. பாருங்கள்! இது குறித்து தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? **நீங்கள் சொல்லலாம்; நல்லது, இப்பொழுது நான் சிலவற்றை சொல்லுகிறேன். என்னுடைய சபை மேய்ப்பன்** (Pastor)..... **உங்கள் மேய்ப்பன் சொல்வதைப் பற்றி எனக்கு ஒன்றும் கவலை இல்லை. வார்த்தை என்ன சொல்கிறது என்பது தான் முக்கியம். நீங்கள் கோழி குஞ்சுகளாய் இருக்க விரும்பினால் அப்படியே இருந்து கொள்ளுங்கள். மேய்ப்பன் வார்த்தைக்கு விரோதமாய் பேசினால் அவர் கழுகுகளை போஷிக்கிறவர் அல்ல; அவர் கோழிக்குஞ்சுகளை போஷிக்கிறவரே. புரிந்து கொண்டீர்களா? கழுகுகளை போஷிக்கிறவர் அல்ல. புரிந்து கொண்டீர்களா? கழுகு கழுகினுடைய ஆகாரத்தை தான் சாப்பிடும். புரிந்து கொண்டீர்களா? கழுகு சுத்தமான பறவை. (இது சூரிய உதயம், பக்கம் 38, கடைசி பத்தி, நாள் 18.04.1965)** பிரியமானவர்களே நீங்கள் கழுகு குஞ்சுகளாக இருக்க விரும்புங்கள். சுவிசேஷகர், பாஸ்டர், ஆவிக்குரிய சபை, ஆவிக்குரிய போதகர் என்று நீங்கள் அழைக்கும் உங்களுடையவர்கள் உங்களை மோசம் போக்க வொட்டாதீர்கள்.

21. இதற்கு எடுத்துக்காட்டாக இங்கு ஒரு சம்பவத்தை எழுத விரும்புகிறேன். நம் வளசரவாக்கம் சபையில் தன்னை தான் செய்தியை மிக்க அறிந்தவர், செய்தியில் மிக்க உறுதியாக உள்ளவர் என பெருமை பாராட்டிக் கொள்ளும் ஒரு சகோதரன் பண ஆசையின் நிமித்தமாக ஸ்தாபன சபை சென்று ஒரு இரட்சிக்கப்படாத அவிசுவாசியாகிய பெந்தேகொஸ்தே பெண்ணை விவாகம் பண்ணினார். இது தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் முற்றிலும் முரணானது, மாறுபாடானது. இவர் வளசரவாக்கம் சபை பாஸ்டரை தன் திருமணத்தை நடத்தி வைக்கும்படி கேட்டார். அவர் மறுத்து விட்டார். இந்த விஷயத்தில் பாஸ்டர் நலமான காரியத்தை செய்தார். மெச்சிக்கொள்ள வேண்டிய காரியம். ஆனால் இவர் மாய்மாலத்தை மறுபுறம் பாருங்கள். அந்த சகோதரன் தன் திருமணத்திற்கு பிறகு சபையாருக்கு சபையில் ஒரு விருந்து கொடுக்க அனுமதி கேட்டுக் கொண்டார். ஆனால் அதற்கு பாஸ்டர் அனுமதி கொடுத்தார். இது எந்த வகையில் நியாயம்? அந்த சகோதரன் திருமணத்திற்கு செல்லமாட்டேன் என்றவர் திருமண விருந்தை எப்படி ஏற்றுக் கொள்ளலாம்? அதற்கு தன் சபையில் இடம் கொடுக்கலாமா? ஏன் அனுமதி கொடுத்தார்? பையன் பணவசதி படைத்தவன். அவனை முற்றிலுமாக ஒதுக்க முடியாது. அவனை ஏதாவது ஒரு வகையில் திருப்தி படுத்த வேண்டும். திருப்திபடுத்தாவிட்டால் அவன் சபைக்கு வரமாட்டான். தனக்கு வரும் தசமபாகம் மற்றும் காணிக்கை குறைந்து விடும். இப்படிப்பட்ட பிசாசின் எண்ணங்கள் இவருக்குள் இவர் உள்ளத்தில் இருந்ததால் தான் அனுமதி கொடுத்தார். பணம் அனைத்து தீமைகளுக்கும் வேராயிருக்கிறது. இந்த பாஸ்டருடைய செயல்பாடுகள் அனைத்தும் மாயை எனவும், இவர் பச்சோந்தி வேஷம் போடுகிறவர் எனவும், இவரால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒருக்காலும் பக்தி விருத்தியடையாது எனவும் ஏற்கனவே உங்களுக்கு அடிக்கடி எழுதியுள்ளேன்.

22. கடந்த ஆண்டு பிற்பகுதியில் கோவை சகோ. ராஜாவிடமிருந்து **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்ததான வெளிப்பாடுகள் வரிசையில் பாகம் 1, மற்றும் பாகம் 2** எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதில் நான் கீழே கூறியுள்ள 5 முரண்பாடான உபதேசங்களை எடுத்துள்ளேன். இன்னும் அதில் அநேக முரண்பாடான உபதேசங்கள் உண்டு. அவைகளை குறித்து அடுத்து அடுத்து எழுதிக் கொண்டு வருவேன். இங்கு இவரது முரண்பாடான உபதேசங்களை வேதவாக்கியம் கொண்டும் இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் தியானிப்போம்.

II. **மத். 28:2. அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லை புரட்டி தள்ளி, அதின் மேல் உட்கார்ந்தான். இந்த கர்த்தருடைய தூதன் இயேசு என்று இவர் உபதேசிக்கிறார். தன் வழக்கத்தின்படி இதற்கு கண் காது மூக்கு வைத்து தன் சுய கற்பனையினால் ஒரு கதையை எழுதியுள்ளார்.**

23. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் குறித்து நான்கு சுவிசேஷகர்களும் எழுதிய பிரபந்தத்தை நாம் அவர்களுடைய சுவிசேஷகங்களில் கீழ்கண்ட அத்தியாயங்களில் தியானிக்கலாம். (அ) மத்தேயு 28:1–8, (ஆ) மாற்கு 16:1–8, (இ) லூக்கா 24:1–12 மற்றும் (ஈ) யோவான் 20:1–18

24. அப்போஸ்தலனாகிய பவுல் நாம் இரட்சிக்கப்படும்படிக்கு மற்றும் நம்முடைய விசுவாசம் விருதாவாயிராதபடிக்கு அவர் அடைந்ததும், நமக்கு பிரதானமாக ஒப்புக்கொடுத்து பிரசங்கித்த சுவிசேஷம் என்னவென்றால்; கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதாகும். ( 1 கொரி. 15: 1–4)

**25. இயேசு கிறிஸ்துவை பிடித்தவர்கள் அவருடைய முகத்தில் துப்பினதினால், கன்னத்தில் அடித்ததினால், தலையில் குட்டினதினால், சிரசில் முள்முடி பின்னி சூட்டினதினால், சிரசில் கோலால் அடித்ததினால், பிலாத்து அவரை வாரியினால் அடிப்பித்ததினால், போர்சேவகர்கள் அவருக்கு வெள்ளைப்போளம் என்ற கசப்பு கலந்த காடியை குடிக்க கொடுத்ததினால், மரத்தினால் செய்யப்பட்ட சிலுவையை சுமக்க வைத்ததினால் அவர் மரிக்கவில்லை. பட்டயம் அவரைக் கொல்லவில்லை. அவருடைய கால்களையும், கைகளையும், ஆணிகளால் அடித்த வேதனையினால் அவர் சாகவில்லை. மாறாக துக்கமே (Grief) அவரைக் கொன்றது. எதினால் அந்த துக்கம் அவருக்கு உண்டானது? அது நம்முடைய பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமங்களின் நிமித்தமாகவும், மீறுதல்களின் நிமித்தமாகவும் உண்டான துக்கமே. நாம் அவருடைய குமாரரும் குமாரத்திகளும் எனக் கூறிக் கொண்டு நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளையெல்லாம் செய்து கோபாக்கினைகளின் பிள்ளைகளாக இருந்ததினால் அவருக்கு உண்டான மனவியாகுலமே அவருடைய மரணத்துக்கு காரணம்.**

26. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக தங்களை முற்றிலுமாக தியாகம் செய்து, அர்பணித்து, அவர்களை அனுதினமும் போஷித்து, பராமரித்து, பாதுகாத்து வருகிறார்கள். தங்கள் சுயநலன்களை மறந்து பிள்ளைகளின் எதிர்கால நலன்களை நாடி, ஓடி, தேடி, அலைகிறார்கள். பிள்ளைகளின் நலன்களே அவர்கள் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது. ஆனால் பிள்ளைகளோ தங்கள் பெற்றோர்களுக்கு கீழ்படிவது இல்லை. கொஞ்சம் படித்தவுடன் பெற்றோர்களை நோக்கி உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் எல்லாம் பழைய காலத்து ஆட்கள். நாங்கள் சொல்வதை கேளுங்கள் என்கிறார்கள். கொஞ்சம் பணம் சம்பாத்தியம் பண்ண ஆரம்பித்தவுடன் பிள்ளைகள் தலை, கால் தெரியாமல் அலைகிறார்கள். பெற்றோர்களை மதிப்பதே கிடையாது. பெற்றோர்கள் அவர்களிடமிருந்து தங்கள் செலவுகளுக்கு கை கட்டி, கை நீட்டி வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதோடு மட்டும் அல்லாது பிள்ளைகள் கொடுத்த பணத்திற்கு பெற்றோர்கள் கணக்கு கொடுக்க வேண்டியது இருக்கிறது.

27. குடும்பங்களில் ஆண் பிள்ளைகளைவிட பெண் பிள்ளைகள் மிகவும் மோசமாக இருக்கிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பி வைக்கிறார்கள். அவர்கள் கல்லூரி செல்லாமல் ஊர் சுற்றித் திரிகிறார்கள். பாய்

பிரண்ட் மற்றும் கால் பிரண்ட். அத்துடன் வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம். மேலும் பந்தா செலவுகளுக்காக களவு செய்கின்றனர். திருமண வயது வந்தும் தகுந்த வரன்கள் கிடைப்பதில்லை. வயது 30/40 ஆன பிறகு திருமணம் நடக்கிறது. சிலர் தங்கள் பாய் பிரண்டுடன், கால் பிரண்டுடன் ஓடிப்போகிறார்கள். சிலருக்கு திருமணம் நடக்காமலே போய்விடுகிறது. சிலர் தூக்குப் போட்டு, சிலர் நான்றுகொண்டு சாகிறார்கள்.

28. பொதுவாக ஆண் பிள்ளைகளோ, பெண்பிள்ளைகளோ அவர்களுடைய வார்த்தையில் உண்மையில்லை. நடக்கைகள் தாறுமாறாக இருக்கின்றன. அன்பு உள்ளத்தில் எள்ளளவு கூட இல்லை. மாறாக எதிலும் மாய்மாலம். தேவனுடைய ஆவிக்கு பதிலாக உலக ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு வழிநடத்தப்படுகிறார்கள். அனுதினமும் கண்ணின் இச்சைகள், மாம்சத்தின் இச்சைகள், ஜீவனத்தினால் உண்டான பெருமைகள், ஒன்றுமில்லாவிட்டாலும் வீண் பந்தா வாழ்க்கைகள். தேவனிடத்தில் விசுவாசம் இல்லை. வேதவாக்கியங்கள் மீது சிந்தை இல்லை. சத்தியத்தை வெறுக்கும் காதுகள், ஒரு பேர் கிறிஸ்தவ பாரம்பரிய வாழ்க்கை.

29. இந்த பேர் கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்த காரியத்திலும் பொய்யும் புரட்டும். எதிலும் உண்மையில்லை. தீமையான காரியங்களிலே பிறருக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள். இதனால் பெற்றோர்களுக்கு எங்கும், எதிலும் எப்பொழுதும் அவமானம். இவர்கள் நிமித்தமாக பெற்றோர்களுக்கு சமுதாயத்தில் பழி, நிந்தை தலைகவிழ்ந்து தரையை நோக்க வேண்டியதாயிற்று. குடல்கள் கொதித்தது. ஈரல் இளகி தரையிலே வடிந்தது. இரவும், பகலும் பெற்றோர் நதியவ்வளவு கண்ணீர்விடுகிறார்கள். அவர்கள் முகம் கரியினால் கருத்துப்போயிற்று. பெற்றோர் பிள்ளைகளை திருத்தும்படி அடிக்கமுடியவில்லை. அவர்கள் வாய் நாற்றம் எடுக்கும்படி தகாத வார்த்தைகளினால் மனச்சாட்சிக்கு விரோதமாக திட்டித்தான் தீர்க்கவேண்டியதிருக்கிறது. இதனால் பெற்றோர்களை அவர்கள் வயோதிப காலத்தில் பிள்ளைகள் பகைக்கிறார்கள், மிரட்டுகிறார்கள், திட்டுகிறார்கள், அலட்சியப் படுத்துகிறார்கள், சபிக்கிறார்கள், அவர்களை போஷிப்பதில்லை, பராமரிப்பதில்லை, கைவிடுகிறார்கள்.

30. ஆனால், அந்த தாயோ தன் கர்ப்பக்கனிகளுக்கு எத்தனை ஆண்டுகளாக தன்னுடைய முலைப்பாலை குடிக்கக்கொடுத்து வளர்த்தாள், எத்தனை காலம் தன் இடுப்பில் வைத்து சுமந்தாள், எத்தனை ஆண்டுகள் தன் மார்பில் வைத்து அனைத்தாள், தன் முழங்கால்களில் வைத்து தாலாட்டினாள், அவர்கள் மலஜலம்களை சுத்தம் செய்து குளிப்பாட்டி துணிமணிகளை துவைத்து நல்ல ஆடைகளை அணிவித்து அழகு பார்த்து மகிழ்ந்தாள். பிள்ளைகள் நடத்தைகளை பார்த்து பெற்றோர்கள் வாழ்வதைவிட மரணத்தையே எதிர்பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள். அவர்கள் மானம், மரியாதை காற்றில் போகிறதோ! ஆனாலும் அவர்கள் பிழைத்திருப்பது தேவனுடைய சுத்த கிருபையே.

31. ஆம், பிள்ளைகளால் பெற்றோர்கள் அனுதினமும் அனுபவிக்கும் துக்கத்துக்கும், மனதுயரத்துக்கும், அவமானத்திற்கும், நிந்தைகளுக்கும், இருதய வியாகுலத்துக்கும், வேதனைகளுக்கும் எல்லையுண்டோ? இல்லை, ஐயா இல்லை, இப்படியாக பிள்ளைகளால் பெற்றோர்கள் படும் துக்கத்தைப் போன்றுதான் இயேசுவும் தம்முடைய பிள்ளைகளுக்காக, குமாரரும், குமாரத்திகளுக்காக துக்கத்தை அனுபவித்து அந்த துக்கத்தின், துயரத்தின் வியாகுலத்தின், கிலேசத்தின், சஞ்சலத்தின், அதிவிசாரத்தின் நிமித்தமாக கல்வாரியில் பாடுபட்டார், மரித்தார்.

32. மெய்யாகவே அவர் (இயேசு) நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களை சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிப்பட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். அவர் அசட்டைப் பண்ணபட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவிக்கிறவருமாயிருந்தார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அங்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டர். கர்த்தரோ நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். தியானியுங்கள் ஏசாயா.53 அதி மற்றும் மத்.8:17.

33. இயேசு துக்கத்தினால் மரித்தபோது, பிதாவே உம்முடைய கைகளில் என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய் கூப்பிட்டுச் சொன்னார். (லூக் 23:46), இயேசுவின் சரீரம் கல்லறைக்கு சென்றது. அவருடைய ஆவி தேவனிடத்திற்குச் சென்றது. வேதவாக்கிம் நிறைவேறத்தக்கதாக அவர் மூன்று நாள் இரவு பகலும் கல்லறையில் இருக்க வேண்டும். யோனா இரவு பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீன் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருக்க வேண்டும். (மத்.12:40) இயேசு ஓய்வு நாளுக்கு (சனி) ஆயத்தமாயிருந்த வெள்ளி அன்று பிற்பகல் வேளையாகிய சாயங்காலத்தில் மரித்தார். சனி, ஓய்வு நாள் ஆரம்பமாயிற்று. வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிறு) அதிகாலையில் உயிர்த்தெழுந்தார். (லூக்.23:54, 24:1).

34. கிறிஸ்து நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களின் நிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டர். அந்த ஆவியிலே அவர் போய் காவலில் உள்ள ஆத்துமாக்களுக்கு பிரசங்கித்தார். அந்த ஆவிகள் பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமல் போனவர்கள்.

35. இயேசு ஆவியில் மரிக்கவில்லை. மாம்சத்தில் தான் மரித்தார். அவருடைய ஆவி பாதாளத்திற்குச் சென்று, சிறைப்பட்டிருந்த ஆத்துமாக்களுக்கு பிரசங்கித்தது. அவருடைய சரீரம் மாத்திரமே மரித்தது. அவர் அதை உயிரோடே எழுப்பி, உயிர்ப்பித்தார். **(கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்** பத்தி 1, பக்கம் 127, நாள் 28.01.1963).

36. இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்து மரித்தார். அப்பொழுது அவருடைய ஆத்துமா பாதாளத்திற்குச் சென்று நீதியை பிரசங்கத்திவனாகிய நோவாவின் நாட்களிலே மனந்திரும்பாத காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கம் செய்தது. அவருடைய சரீரம் கல்லறைக்குச் சென்றது. ஆனால் அவர் மரிக்கும் முன்பு தமது ஆவியை அவர் பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். அவருயை ஆவி தேவனிடத்திற்கு திரும்பிச் சென்றது. வேத வாக்கியம் நிறைவேறும் வரைக்கும் இயேசு உயிரோடு எழும்ப முடியவில்லை. எனென்றால் அவருடைய சரீரம் இரவும் பகலும் மூன்று நாட்களாக கல்லறையில் இருக்க வேண்டியதாய் இருந்தது. வேதவாக்கியம் நிறைவேறின பின்பு அந்த தடை நீக்கப்பட்டு அவருடைய ஆவி ஆத்துமாவுக்குள் இறங்கி, அவருடைய ஆத்துமா சரீரத்திற்குள் இறங்கியது. அவர் உயிர்த்தெழுந்தார். **(என்றென்றும் பிரசன்னமாயுள்ள கன்மலையின் தண்ணீர்**, பத்தி 148, நாள்: 23.07.1961).

37. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து நான்கு சுவிசேஷகர்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் எழுதிய பிரபந்தத்தை நாம் காணும்போது கண்களினால் சம்பவத்தைக்கண்ட சாட்சிகள் (அ) மகதலேனா மரியாள் (ஆ) யாக்கோபின் தாயாகிய மரியாள் (இ) சலோமே (ஈ) பேதுரு (உ) யோவான் ஆகும்.

38. இயேசு மரித்தப்பின் மற்றும் உயிர்த்தெழுந்த காலை நேரத்தில் நடந்த சம்பவங்களை கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தலாம்.

அ) யூதருடைய பட்டணங்களில் ஒன்றாகிய அரிமத்தியாவில் இருந்து வந்தவனும், தேவனுடைய இராஜ்யத்திற்கு காத்திருந்தவனும், இயேசுவுக்கு அந்தரங்கசீஷனும், ஐசுவரியவானும், யூதர்களுடைய ஆலோசனைக்கும், செய்கைக்கும் சம்மதியாதிருந்தவனும், உத்தமனும், நீதியுள்ளவனுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஆலோசனைக்காரன் சாயங்காலமான போது பிலாத்துவினிடத்தில் துணிந்து போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியினாலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதாய், ஒருவனையும் ஒருகாலும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான். (மத். 27:57, மாற் 15:43–46, லூக் 23:50–53, யோ: 19:38)

ஆ) ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைபோளம், கரியப்போளம் கலந்து ஏறக்குறைய 100 இராத்தல் கொண்டுவந்தான். இயேசுவின் சரீரத்தை யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின் படியே அந்த சுகந்தவர்களுடனே சீலையில் சுற்றிக்கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் அதாவது கெத்சமெனே தோட்டத்தில் ஒரு காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையில் வைத்தார்கள் (யோ. 19:39–42)

இ) இயேசு கலிலேயாவிலிருந்த போது இயேசுவுக்கு பின்சென்று ஊழியம் செய்து வந்த மகதலேனா மரியாளும் சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, திரும்பிப்போய், சுகந்தவர்கங்களையும், பரிமளத்தைலங்களையும் ஆயத்தம் பண்ணி ஓய்வு நாளில் ஓய்திருந்தார்கள். (லூக். 23:55,56, மாற். 15:40,41,47).

ஈ) வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது. மகதலேனா மரியாளும், யாக்கோபுவின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் இயேசுவுக்கு சுகந்தவர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக்கொண்டு கல்லரையினிடத்தில் வந்து கல்லறையின் வாசலில் இருந்து கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். (மத் 28:1, மாற் 16:1–3)

உ) அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி, **கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலிலிருக்கிற கல்லைப் புரட்டித் தள்ளி, அதன் மேல் உட்கார்ந்தான்.** (மத்.28:2). இது தேவனுடைய தூதன் என்பதை **போய் என் சீஷர்களுக்கு சொல்லுங்கள்** செய்தியில் 110 வது பத்தியில் தியானிக்கலாம்.

ஊ) ஸ்திரீகள் மூன்று பேரும் வந்து கல்லறையில் வாயிலிருந்த கல் புரட்டி தள்ளப்பட்டிருக்க கண்டார்கள். அந்த கல் மிகவும் பெரியதாய் இருந்தது. (மாற். 16:4, யோ.20:1)

எ) உடனே மகதலேனா மரியாள் ஓடி, சீமோன் பேதுருவிடத்திலும், இயேசுவுக்கு அன்பாயிருந்த யோவானிடத்திலும் போய்; கர்த்தரை கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டுப் போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்கு தெரியவில்லை என்றாள். (யோ.20:2)

ஏ) பேதுருவும், யோவானும் கல்லறையினிடத்திற்கு போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். (யோ.20:4)

ஐ) இந்த வேளையில் யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமேயும் கல்லறைக்குள் வந்து, அங்கு இரு தூதர்களைக் கண்டார்கள். தூதர்கள் **இயேசு இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்** என்ற நற்செய்தியை அறிவித்தார்கள். அவர்கள் இதை இயேசுவின் சீஷர்களிடம் அறிவிக்க சென்றார்கள். (மத்.28:5–8).

ஒ) பேதுருவும் யோவானும் கல்லறைக்குள் பிரவேசித்து, இயேசு உயிரோடெழுந்ததைக் கண்டு விசுவாசித்தார்கள். பின் தங்களுடைய இடத்திற்கு திரும்பிப்போனார்கள். (யோ.20:3–10).

ஓ) மகதலோன மரியாள் வந்து கல்லறையின் அருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். அங்கு இயேசு அவளுக்கு தரிசனமானார். (யோ.20:11–18). வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலோன மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார். (மாற் 16:9).

ஔ) மற்ற ஸ்திரீகளும் இயேசுவினுடைய சீஷர்களுக்கு அறிவிக்கச் சென்றபோது, இயேசு தாமே அவர்களுக்கு வெளிப்பட்டு **வாழ்க** என்றார். அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதத்தை தழுவி, அவரைப் பணிந்துக்கொண்டார்கள். (மத்.28:9)

ஃ) நடந்த சம்பவங்களை எல்லாம் பதினோருவருக்கும் மற்ற எல்லாருக்கும் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், அவர்களுடனே கூட இருந்த மற்ற ஸ்திரீகளும் அறிவித்தார்கள். (லூக் 24:9,10)

39. கர்த்தருடைய தூதன் இயேசுவை வைத்த கல்லறையின் வாசலில் இருந்த கல்லை புரட்டிய சம்பவம் குறித்து, சம்பவத்தை கண்களால் கண்ட யோவான் எதுவும் எழுதவில்லை. மாற்கும், லூக்காவும் கூட எதுவும் எழுதவில்லை. மத்தேயு மட்டும் எழுதுகிறார். அதாவது வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிறு) விடிந்து வருகையில் மகதலேனா மரியாள், மற்றும் யாக்கோபின் தாயாகிய மரியாள் இருவரும் இயேசுவை வைத்த கல்லறையை பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் (the angel of the Lord) வானத்திலிருந்து இறங்கி வந்து, வாயிலிருந்த கல்லை புரட்டித்தள்ளி, அதன் மேல் உட்கார்ந்தான் என்று எழுதுகிறார்.

40. மற்ற மூன்று சீஷர்களும், ஸ்திரீகள் கல்லறைக்கு அவர்கள் வந்த போது கல்லறையிலிருந்த கல் புரட்டி தள்ளப்பட்டிருப்பதைக் கண்டார்கள் என்றே எழுதுகிறார்கள். கல்லை புரட்டியது யார் என்ற விவரத்தைக்குறித்து எதுவும் எழுதவில்லை.

41. அடுத்து கல்லறை வாயில் இருந்த கல்லை புரட்டி தள்ளிய தூதன் இரு மரியாள்களோடும் இடைப்பட்டு **இயேசு இங்கே இல்லை** என்ற செய்தியையும் **அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்** என்ற செய்தியையும் கூறியதாக **மத்தேயு** எழுதுகிறார்.

42. இந்த சம்பவம் குறித்து **மாற்கு** வெள்ளை அங்கிதரித்திருந்த ஒரு வாலிபன் மூன்று பெண்களிடமும் இடைப்பட்டு **இயேசு இங்கே இல்லை** எனக் கூறியதாக எழுதுகிறார். மத்தேயும் அந்த தூதனுடைய ஆடை வெண்மையாகவே இருந்தது என எழுதுகிறார்.

43. **லூக்கா**, இரு தூதர்கள் பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்திருந்தார்கள், அவர்கள் அந்த ஸ்திரீகளிடம் **இயேசு இங்கே இல்லை** என கூறியதாக கூறுகிறார்.

44. **யோவான்** இந்த சம்பவம் குறித்து எதுவும் எழுதவில்லை மாறாக இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளாடைதரித்த இரு தூதர்கள் மகதலேனா மரியாளோடு மட்டும் இடைப்பட்டதை எழுதுகிறார்.

45. சுருக்கமாக சொல்லப்போனால் **மத்தேயு** மட்டும் கல்லறை வாயிலிருந்த கல்லை புரட்டி தள்ளியது கர்த்தருடைய தூதன் என்றும், அவர் தான் அந்த ஸ்திரீகளோடு இடைப்பட்டார் எனவும், **மாற்கு** ஒரு வாலிபன் எனவும், **லூக்கா** மற்றும் **யோவான்** இரு தூதர்கள் எனவும் எழுதுகிறார்கள். அந்த இரு தூதர்களும் ஸ்திரீகளோடு இடைப்பட்டதாக எழுதுகிறார்கள்.

46. நான்கு சுவிசேஷகர்களுடை பிரபந்தத்திலிருந்து **இயேசு இங்கே இல்லை, அவர் தான் சொன்னபடி உயிர்த்தெழுந்தார்** என்று கூறிய தூதனே கல்லறையில் வாயிலிருந்த கல்லைப்புரட்டினான் என்பது உறுதியாகிறது. அந்த தூதர்கள் எண்ணிக்கை ஒன்று, இரண்டு என வித்தியசமான எண்ணிக்கையை நான் காண்கிறோம்.

47. இப்பொழுது நம்முடைய வாதம் கல்லறைவாயிலிருந்த கல்லை புரட்டி தள்ளி, அதன் மேல் உட்கார்ந்து **இயேசு இங்கே இல்லை, அவர் தாம் சொன்னபடியே உயிர்தெழுந்தார்** என்று கூறிய கர்த்தருடைய தூதன் யார்? **அது இயேசு** என தன்னை தானே சுவிசேஷகனாக, பாஸ்டராக அழைத்துக்கொள்ளும் கோவை ராஜா எழுதுகிறார். இது ஒரு லௌகிக ஞானம், ஒரு தவறான போதனை, ஒரு மாறுபாடான உபதேசம்.

48. **அந்த கர்த்தருடைய தூதன் இயேசு அல்ல.** ஏன் என்றால் அந்த ஸ்திரீகளிடம் அந்த தேவ தூதன்/வாலிபன்/வெள்ளையுடை தரித்த இருவர் (மத்தேயு, கர்த்தருடைய தூதன் மற்றும் தேவ தூதன் என்கிறார், மாற்கு அது ஒரு வாலிபன் என்கிறார், லூக்க மற்றும் யோவான் பிரகாசமான வெள்ளாடை தரித்த இருவர் என்கிறார்). **அவர் (இயேசு) இங்கே இல்லை, அவர் உயிர்தெழுந்தார்** என்கிறார்.

49. இங்கு சற்று நன்கு கவனிப்பீர்களானால், **இயேசு இங்கே இல்லை, அவர் தாம் சொன்னபடியே உயிர்தெழுந்தார்** என்று கூறிய தூதனே வாயில் உள்ள கல்லை புரட்டி தள்ளி அதன் மீது உட்கார்ந்தான். இயேசு கல்லறையிலுள்ள கல்லை புரட்டி அதன் மீது உட்கார்ந்து கொண்டு இயேசு இங்கே இல்லை. அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் எனக் கூற முடியுமா? அப்படியானால் அவர் தன்னைத் தானே மறுதலிக்கிறவராக இருக்கிறார் அல்லவா? இயேசு ஒரு இடத்தில் இருந்துகொண்டு, தான் அந்த இடத்தில் இல்லை என மறுக்க முடியமா? அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் தம்மை தாம் மறுதலிக்கமாட்டார். 2 தீமோ 2:13. ஆதலால் அது நிச்சயமாக ஒரு தேவதூதனே. அவன் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை கொண்டு வந்த செய்தியாளன். இயேசு தாமே தம்முடைய உயிர்த்தெழுதலை கொண்டுவரும் ஒரு செய்தியாளனாக / ஒரு தூதனாக இருக்க முடியாது.

**50. கர்த்தருடைய தூதனாக வருகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்ல என்பது குறித்து நீங்கள் □எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார்" என்ற செய்தியில் 37வது பக்கத்தில் காணலாம். கர்த்தருடைய தூதன் கர்த்தரிடத்திலிருந்து செய்தியை கொண்டுவரும் ஒரு தூதன். கர்த்தர் என்பது அதே நபரே. அவர் (இயேசு) கர்த்தரிடத்திலிருந்து வருகிற தூதன் அல்ல. கர்த்தருடைய தூதன் கர்த்தரிடத்திலிருந்து வார்த்தையை கொண்டு வருகிறான்.** பிறகு, கர்த்தரிடத்திலிருந்து வருகிற இயற்கைக்கு மேம்பட்ட தூதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் காபிரியேல், மிகாவேல், எட்டி போன்ற பெயர் கொண்ட தூதர்கள். இது குறித்து கே.ப. 385 தியானியுங்கள். உடன்படிக்கையின் தூதன் என்பது கிறிஸ்துவையே குறிக்கும். ஆதலால் பிரியமானவர்களே ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாமல் கேட்கிறவர்களை கவிழ்த்துப் போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் நமக்கு தேவையில்லை.

51. இங்கு மீண்டும் ஒரு சம்பவத்தைக் குறித்து எழுதி, இயேசுவை வைத்த கல்லறை வாயிலிருந்த கல்லை புரட்டித் தள்ளி, அதன் மீது உட்கார்ந்த கர்த்தருடைய தூதன் இயேசு அல்ல என்பதை திருஷ்டாந்தப்படுத்த விரும்பிகிறேன். இயேசு மரித்தபோது பாதாளத்துக்குச் சென்று காவலில் உள்ள ஆவிகளுக்கு பிரங்கித்தார். (1 பேது 3:19) அவர் எப்படி அங்கு சென்றார்? எப்படி அவர் பிரசங்கித்தார்? அவருக்கு உணர்ச்சி என்னும் புலன் இருந்தது. கேட்குதல் என்னும் புலன் இருந்தது. பேசுதல் என்னும் புலன் இருந்தது. அவர் உயிரோடெழுந்தபோது, அந்த சரீரம் அழியாமையை காண முடியவில்லை. அழிவு உண்டாகும் 72 மணி நேரத்திற்கு முன்பே அந்த தியாபனி சரீரம். நோவாவின் காலத்தில் தேவன் நீடிய பொறுமையோடு காத்திருந்து கீழ்படியாமற்போன காவலில் உள்ள அந்த ஆவிகளுக்கு பிரசங்கித்து மறுபடியும் உயிரோடெழுந்து அழிவுடையது அழியாமையை தரித்துக் கொண்டது.

52. அவர் மகதலேனா மரியாளுக்கு தன்னை வெளிப்படுத்தும்போது அவளை நோக்கி : என்னைத் தொடாதே நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறி போகவில்லை என்றார் (யோ 20:17) ஆனால் இந்த சம்பவத்திற்கு 8 நாட்களுக்கு பின் தோமாவை நோக்கி : நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு என்றார். (யோ 20:27) ஏன்? அவர் அப்பொழுது தேவனுடைய சமூகத்திற்கு போய், அங்கிருந்து திரும்பி வந்து அவரை தொடும்படி தோமாவை அழைத்தார். இது குறித்து நீங்கள் கே.ப. 117 தியானிக்கலாம்.

53. பாருங்கள் மகதலேனா மரியாளை நோக்கி : தொடாதே என்றார் 8 நாட்கள் கழித்து தோமாவை நோக்கி : என்னைத் தொட்டுப் பார் என அழைத்தார், மகதலேனா மரியாளிடம் அவர் கூறிய சமயத்தில் அவர் தேவனிடத்திற்கு ஏறி போகவில்லை. தோமாவிடம் கூறிய சமயம் அவர் தேவனிடத்திற்கு ஏறிப்போய் அங்கிருந்து திரும்பி வந்தவிட்டார்.

54. அடுத்து கல்லை புரட்டிய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்தான் என (மத் 28:2)–ல் வாசிக்கிறோம். இயேசு உயிர்த்தெழுந்தபின், இன்னும் பிதாவினிடத்திற்கு ஏறிபோகவில்லை. காரியம் அப்படியிருக்க அவர் எப்படி வானத்திலிருந்து இறங்கி வந்திருக்க முடியும்? அவர் மகதலேனாவிடம் இன்னும் ஏறி போகவில்லை என்றாரே, அப்படியானால் அவர் இறங்கியிருக்க முடியாதே. மத் 28:2–ல் தூதன் பூமி மிகவும் அதிரும்படி வானத்திலிருந்து இறங்கி வந்தான் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் அந்த கர்த்தருடைய தூதன் ஒரு தேவதூதனேயன்றி இயேசு அல்ல. இயேசு என்ற கோவை சகோ. ராஜாவின் உபதேசம் அவருடைய சொந்த கற்பனை, கட்டு கதை. பொதுவாக இவருடைய உபதேசங்களில் பெரும்பாண்மையானவைகள் யாவும் லௌகீக சம்பந்தமான கற்பனைகளும், கட்டுக் கதைகளுமே. ஆதலால் அவருடைய உபதேசங்களை நம்பி உங்கள் பந்தய பொருளை இழந்து போகாதீர்கள்.

**III. எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு முன்பு, ஏழு சபை காலங்களில் மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் தியாபனி சரீரத்தில் தோன்றுவார்கள். அதன்பின் தான் அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதுவும் கோவை சகோ. ராஜாவினுடைய ஒரு மாறுபாடான உபதேசம்.**

55. இயேசுவானவர் பாடுபட்ட பின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலர்களுக்கு தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளை அவர்களுடனே பேசி அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார் (அப் 1:3) இந்த வாக்கியம் இயேசு பாடுபட்ட பின்பு ஏன் நாற்பது நாட்கள் அப்போஸ்தலர்களுக்கு தரிசனமானவர் என்பதை விளக்கி காட்டுகிறது. இயேசு உயிர்த்தெழுந்தபின்பு நாற்பது நாட்கள் பூமியில் சஞ்சரித்தார். இது நிமித்தமாக இயேசுவுக்கு பின் உயிர்த்தெழுந்த பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள் பூமியில் நாற்பது நாட்கள் சஞ்சரிக்கவேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால் இன்னும் இயேசு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இயேசுவுக்கு முன்னே பழைய ஏற்பாடு உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட முடியாது. ஆதலால்

அவர்கள் இயேசுவுக்காக காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருந்தது. இயேசு உயிர்த்தெழுந்த பின் நாற்பது நாட்கள் தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்பட வேண்டியதாய் இருந்தது. ஆதலால் உயிர்த்தெழுந்த பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள் இயேசுவுடன் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இயேசுவுடன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாயிருந்தது. பழைய ஏற்பாடு பரிசுத்தவான்களை அவர் அழைத்துக்கொண்டு உன்னதத்திற்கு ஏறினார் (**எடுத்துக் கொள்ளப்படுதல்**. பத்தி 175 மற்றும் அப் 1:9).

56. இயேசு உயிர்த்தெழுந்தபின் பூமியில் சஞ்சரித்த நாட்களில் அவர் உயிர்த்தெழுந்த நாளில் மட்டும் 5 முறையும், அதன் பின்பு 6 முறைகள் பலருக்கு தரிசனமானதை வேதவாக்கியங்களில் காண்கிறோம்.

அ. வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு கெத்சமனே தோட்டத்தில் மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார். (மாற். 16:9, யோ. 20:14–17)

ஆ. ஸ்திரீகள் இயேசுவின் உயிர்த்தெழுதலை சீஷர்களுக்கு அறிவிக்க போகிற போது இயேசு தாமே அவர்களுக்கு எதிர்பட்டு **வாழ்க** என்றார். இதுவும் கெத்சமனே தோட்டத்தில் நடந்தது (மத். 28:9)

இ. இயேசு சீமோன் பேதுருவுக்கு உயிர்த்தெழுந்த நாள் பிற்பகல் எருசலேமில் தரிசனமானார் (லூக். 24:34, 1 கொரி. 15:13)

ஈ. இயேசு தாம் உயிர்த்தெழுந்த நாள் மாலை எம்மாவு எனனும் கிராமத்திற்கு போன இரு சீஷர்களுக்கு (இதில் ஒருவர் கிலெயோப்பா) எருசலேமுக்கும் எம்மாவுக்கும் இடையே தரிசனமானார் (லூக். 24:13–32)

உ. தோமா இல்லாத வேளையில் மற்ற பத்து சீஷர்களுக்கும் எருசலேமில் தரிசனமானார் (லூக். 24:35–49 யோ. 20:19–25)

57 மேற்கூறிய 5 தரிசனங்களும் இயேசு வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் உயிர்த்தெழுந்தபின்பு சாயங்காலம் வேளை வரை சம்பவித்தவை ஆகும். மறுபடியும் 8 நாட்களுக்கு பின்னும் அதன் பின்னும் பலருக்கு தரிசமானார்.

அ. பத்து சீஷர்களுக்கும் தோமாவுக்கும் (மாற்.16:14–18 யோ. 2026–31)

ஆ. திபேரியா கடற்கரையில் சீமோன் பேதுரு, தோமா, நாத்தான்வேல், செபதேயுவின் குமாரர், அவருடைய சீஷர்கள் வேறு இரண்டு பேர் கூடியிருக்கும்போது. யோ. 21 அதி. இயேசு மரித்தோரிடமிருந்து எழுந்த பின்பு தம்முடைய சீஷர்களுக்கு அருளின தரிசனங்கில் இது மூன்றாவது ஆகும். இங்கு சீஷர்கள் மொத்தம் ஏழு பேர் இருந்தனர்.

இ. கலிலேயாவில் உள்ள ஒரு மலை மீது சீஷர்களுக்கு தரிசனமானார். (மத். 28:16–20 1 கொரி. 15:5)

ஈ. ஒரே நேரத்தில் 500 பேர்களுக்கு அதிகமான சகோதரர்களுக்கு தரிசனமானார் (1 கொரி. 15:6)

உ. யாக்கோபுக்கு (1 கொரி. 15:7)

ஊ. இதன் பின்பு அப்போஸ்தலருக்கு. இது இயேசு பரலோகம் எடுத்துக்கொள்ளப்படுகையில் பெத்தானியாவில் நடந்தது. (மாற். 16:19–20, லூக். 24:50–53, 1 கொரி. 15:7)

58. ஆனால் ஏழு சபை கால பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்தபின்பு அவர்கள் 40 நாட்கள் எதற்காக காத்திருக்க வேண்டும்? எந்த நோக்கத்திற்காக அவர் பூமியில் 40 நாட்கள் தியாபனி சரீரத்தில் காணப்பட வேண்டும்? எதற்கும் ஒரு நோக்கம் ஒன்று வேண்டுமல்லவா? அந்த நோக்கத்தை வேதவாக்கியங்கள் தெளிவுபடுத்த வேண்டும். சகோ. ராஜாவின் இந்த போதகம் வேதவாக்கியங்களிலும் இக்காலத்திற்குரிய செய்தியிலும் இல்லாத ஒன்று ஆகும். இது அவருடைய விலை போகாத சொந்த சரக்கு ஆகும். பொதுவாக இவர் உபதேசங்கள் யாவும் கற்பனை காவியங்கள் ஆகும். தன் சுயகற்பனை சக்தியை கொண்டு, லௌகீக ஞானத்தைக் கொண்டு மனம்போன போக்கில் எதை எதையோ எழுதி மக்களை குழப்புகிறார். வஞ்சிக்கிறார். மரணத்திற்கு வழி நடத்துகிறார். விசாலமான பாதையில் செல்கிறவர்கள் அவரை பின்பற்றுகிறார்கள்.

59. முதலாவதாக உயிர்த்தெழுதல் நிகழும், நித்திரை அடைந்தவர்களின் உயிர்த்தெழுதல். கிறிஸ்துவுக்குள் மரித்து பூமியின் தூளில் நித்திரை செய்துகொண்டிருப்பவர்கள் முதலில் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். அவர்களுடைய அழிவுள்ள சரீரங்கள் அழியாமையை தரித்துக்கொள்ளும். அவர்கள் ஒன்று கூட தொடங்கும்போது, உயிரோடிருக்கிற நாம் மறுரூபப்படுவோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் மரணத்தை காண்பதில்லை. அதன்பிறகு நாம் அவர்களுடன் ஒன்று சேர்ந்து, அவர்களோடு கூட எடுத்துக்கொள்ளப்பட்டு, கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம். கே.ப. 240, பத்தி 58. இதற்கும் மிஞ்சியது பரத்திலிருந்து வராத ஞானம்.

**IV. ஏழு தேவதூதர்களால் உண்டான மேக வளையம் வெளி. 8:1 அரை மணி நேர அமைதல் என்றும் வெளி 10:1–ன் பலமுள்ள வேறொரு தூதன் வருகை என்று கூறுகிறார். இதுவும் கோவை சகோ. ராஜாவினுடைய லௌகீக ஞானம்.**

60. ஏழு தூதர்களினால் உண்டான மேகவளையம் ஏறக்குறைய 28 நிமிடங்கள் மட்டும் காணப்படவில்லை. அது பல மணி நேரங்கள் காணப்பட்டது என்பதை எனது கடந்த செய்தி தொகுப்புகளில் அமெரிக்க அரசு ஆவணங்களை ஆதாரமாக கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினேன். மேலும் அந்த தோற்றம் வெளி. 10:1 ஐ பிரதிபலிக்கவுமில்லை. வெளி. 10:1–ல் பலமுள்ள வேறொரு தூதன் தோற்றம், மற்றும் இந்த ஏழு தூதர்களால் உண்டான மேகவளையம் தோற்றம் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது என்பதையும் உங்களுக்கு தெளிவுபடுத்தினேன். மேகவளையம் தோற்றம் வெளி. 1:14 ஒப்பாகவே இருந்தது. அது ஒரு அடையாளம்.

61. ஏழு சபை காலங்களின் தூதர்களும் ஏழு சபையின் காலத்தோடே போய் விட்டார்கள். அந்த காரியங்களை நாம் பிரிக்க முடியாது. அவர்கள் அந்த புகைப்படத்தை எடுத்தார்கள். நாம் அல்ல. அங்கே தான் அவர் பிரதான நீதிபதியாக நின்றுகொண்டு அவர் தான் அல்பாவும், ஒமேகாவும் என்றும், ஆதியும் அந்தமுமானவர் என்றும் வெளிப்படுத்திக் காட்டினார். என்ன அடையாளம் காணுதல் (What Identification) இது சூரிய உதயம். பக்கம் 76, முதல் பத்தி, நாள் 18.04.1965. ஏழு தூதர்களினால் உண்டான மேக வளையம் ஒரு அடையாளமே அன்றி மற்றபடி எதுவுமில்லை. சத்தியம் ஒன்று வெளிப்படும்போது அது அடையாளங்களினால் உறுதிப்படுகிறது.

62. பாருங்கள் ஏழு தூதர்களினால் உண்டான மேகவளையம் வெளி. 8:1 அரைமணி நேர அமைதல் இல்லை. வெளி. 10:1 பலமுள்ள வேறொரு தூதன் வருகை அல்ல. தலைக்கல் வருகை அல்ல. இப்படிப்பட்ட உபதேசம் யாவும் மனுஷ ஞானத்திற்குரியது. பிரியமானவர்களே பொய்யனுடைய மாயத்தினாலே வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசினுடைய உபதேசங்களுக்கும் செவிகொடுத்து உங்கள் விசுவாசத்தை விட்டு வழுகி விலகிப்போகாதிருங்கள்.

**63. இவர் தனது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்தான வெளிப்பாடுகள் வரிசையில் பாகம் 3ல் 12வது** பக்கத்தில் 1963–ல் பலமுள்ள வேறொரு தூதன் பூமிக்கு இறங்கினார் என்று தீர்க்கதரிசி பிரன்காம் கூறினார் என செய்தியை புரட்டி அதற்கு ஆதாரமான ஏழு முத்திரைகள் பக்கம் 123, பத்தி 41,42 எடுத்துக்காட்டுகிறார். நீங்கள் இவர் குறிப்பிட்டுள்ள பகுதியை வாசிப்பீர்களானால் அது கீழ்கண்டவாறு உள்ளது. பலமுள்ள தூதன் பூமிக்கு இறங்கும் இந்த வருகையின் நேரத்தில் இந்த ஏழாம் தூதன் பூமியில் ஏற்கனவே இருக்கிறார் என்பது நினைவிருக்கட்டும். (பத்தி 41). அந்த தூதன் பிரத்திட்சயமாவதற்கு சமயம் வந்துவிட்டது. நாம் மிக அருகாமையில் இருக்கிறோம். (பத்தி 47). பாருங்கள் இங்கு 1963–ல் பலமுள்ள வேறொரு தூதன் பூமிக்கு இறங்கினார் என்று தீர்க்கதரிசி கூறவே இல்லை. பிரியமானவர்களே இவர் உபதேசங்கள் யாவும் இக்காலத்துக்குரிய செய்தியில் ஒன்றை கூட்டியும் குறைத்தும் காணப்படும். தன் கற்பனைகளை செய்தியோடு புகுத்தி செய்தியை தாறுமாறாக்கி மக்களை குழப்புவார். ஆதலால் இவருடைய போதனையை நம்பி மோசம் போகாதீர்கள்.

64. அடுத்து பலமுள்ள வேறொரு தூதனின் அடையாளம் அவர் சிரசின் மேல் வானவில் இருந்தது. ஆனால் 1963ல் பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி தோன்றிய மேகவளையம் இயேசுவினுடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைபோல வெண்மையாக இருந்ததாக அல்லவா பிரதிபலிக்கிறது. வெளி. 10:1 காட்சியும் இந்த காட்சியும் வித்தியாசமானது அல்லவா!

**V. எழு முத்திரைகளின் முதன் முதலில் உடைக்கப்பட்டது ஏழாம் முத்திரையாகும். இதுவும் ஒரு பிசாசின் உபதேசம்.**

65. ஏழாம் முத்திரை உடைக்கப்பட்ட பிறகு தான் இதர ஆறு முத்திரைகளும் காட்சியில் வருகிறது என்பது ஒரு பிசாசின் உபதேசமே. இதற்கு வேதவாக்கியங்களில், இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து எந்தவித ஆதாரமும் இல்லை. வெளி.6வது அதியில் ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்க கண்டேன் எனவும். இரண்டாம் முத்திரையை உடைத்த போது எனவும், அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது எனவும், அவர் நான்காம் முத்திரையை உடைத்த போது எனவும், அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்த போது எனவும், அவர் ஆறாம் முத்திரை உடைக்க கண்டேன் எனவும் 6:1 3,5,7,6, மற்றும் 12 வசனங்களில் காண்கிறோம். வெளி. 8:1 ல் அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது எனக் காண்கிறோம். முதலாம் முத்திரை சம்பவம் தான் சபையில் முதலாவது காட்சிக்கு வந்தது. அதன் பின் 2,3,4 என ஒன்றன்பின் ஒன்றாக காட்சிக்கு வந்தது. 4வது முத்திரைக்கு பின் சபை எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அப்பொழுது தான் 7 வது முத்திரை காட்சிக்கு வருகிறது. ஏனென்றால் சபை எடுத்துக்கொள்ளப்படும் வேளையை அதாவது கர்த்தர் வரும் வேளையை பிதா தவிர வேறு ஒருவனும் அறியான். அதன் பின் சுவிசேஷம் இஸ்ரவேலருக்கு திரும்புகிறது. அங்கு 5 மற்றும் 6 முத்திரைக்குரிய சம்பவங்கள் காட்சிக்கு வருகின்றன. 5ம் முத்திரை உடைக்கப்பட்டபோது, சபை ஏற்கனவே எடுக்கபட்டுவிட்டது. 7ம் முத்திரை முந்தின 6 முத்திரைகளுக்குமுன் காட்சிக்கு வந்துவிட்டது என்பது தவறான உபதேசம். ஏழாம் முத்திரை கர்த்தருடைய வருகை. அந்த நாளுக்காக நாம் நம்மை ஆயத்தப்படுத்தி காத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஒன்றை தவிர, அது என்ன? ஏழாம் முத்திரை. அது என்னவென்று இன்னும் தெரியவில்லை. ஏ.மு. பக்கம் 782, பத்தி 56. புதிய பதிப்பு. நாள்: **24.03.1963. ஏழாம் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை. உங்களுக்கு தெரியும் அது கர்த்தருடைய வருகை. (எக்காளப் பண்டிகை, பக்கம்.41, பத்தி.1, நாள் 19.07.1964). கிறிஸ்துவின் வருகையுடன் ஏழாம் முத்திரை அடையாளம் கண்டு கொள்ளப்படக் காத்திருக்கிறது. (கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்? பத்தி 182, நாள் 24.11.1963).** பிரியமானவர்களே, இக்காலத்திற்குரிய செய்தியின் படி ஏழாம் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை. கர்த்தருடைய வருகை இன்னும் வரவில்லை. கர்த்தருடைய வருகை 28.02.1963ல் வந்துவிட்டது என்பது இக்காலத்திற்குரிய செய்தி அல்ல. இதற்கு மிஞ்சின போதனை பிசாசினுடையதே.

VI. பலமுள்ள **வேறொரு தூதன் சிங்கம் கெர்சிக்கிறது போல ஆர்ப்பரித்தபோது அமைதி, இந்த தலைக்கல் இறங்கும்போது – ஏறக்குறைய அரை மணி நேர அமைதி. பலமுள்ள வேறொரு தூதன் இறங்கியவுடன் ஏழாம் தூதனுடைய ஊழியம் முடிவுபெறுகிறது. கிறிஸ்து இப்பொழுது பூமியில் மணவாட்டியுடன் இருக்கிறார். மேலே இல்லை. இங்கே இருக்கிறார்.** இதுவும் ஒரு பேயத்தனத்துக்கடுத்த உபதேசம்.

66. 1963 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பலமுள்ள வேறொரு தூதன் வருகை. அது தலைக்கல் வருகை. மணவாளனும் மணவாட்டியும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். இப்பொழுது கிறிஸ்து பூமியில் மணவாட்டியுடன் இருக்கிறார். அவர் மேலே இல்லை. இப்பொழுது மணவாளன் மணவாட்டியுடன் பூமியில் இருக்க அவர் எப்பொழுது வானத்தில் தோன்றுவார் என்று எதிர்பார்த்து ஜனங்கள் ஏமாந்து போகின்றனர் என்கிறார். தன்னை ஒரு மேதாவியாக நினைத்துக் கொண்டு. குருடர்களுக்கு வழிகாட்டும் குருடனாக இருந்து கொண்டு அவர்களை பாதாளத்துக்கு வழிநடத்திக் கொண்டு வருகிறார். அவருடைய ஆடுகள் அவருடை சத்தத்திற்கு செவி கொடுத்து அவருக்கு பின் செல்கின்றன.

67. ஆயிரம் வருட அரசாட்சி வரைக்கும் மேசியா பூமிக்கு வரமாட்டார். நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை அங்கு சந்திப்போம். அவர் பூமிக்கு வருவதில்லை. அவர் மணவாட்டியை ஆகாயத்தில் எடுத்துக்கொள்கிறார். கே.ப.125 பத்தி 448.

68. நான் இங்கு ஒரே ஒரு உதாரணம் மட்டும் கொடுத்து இவரது உபதேசம் மாறுபாடானது என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இவர் கிறிஸ்து தம்முடைய மணவாட்டியுடன் பூமியில் இருக்கிறார். அவர் மேலே இல்லை. அவர் கீழே பூமியில் இருக்கிறார் என்கிறார். ஆனால் நீங்கள் விசுவாசிக்கும் தீர்க்கதரிசி கூறுகிறதாவது.

அரிசோனாவில் உள்ள பிரஸ் காட்டின் மலைகளில் உள்ள சகோ. லியோ மெர்சியருக்கும். அங்கு கர்த்தருடைய வருகைக்காக காத்துக் கொண்டிருக்கும் அவருடைய குழுவிற்கும் வாழ்த்துதல்களை அனுப்புகிறோம். இன்றிரவு டூசானில் குழுமியுள்ள கர்த்தருடைய வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு வாழ்துக்களை அனுப்புகிறோம். கீழே டெக்ஸாஸில் உள்ள ஹவுஸ்டனில் கர்த்தருடைய வருகைக்காக காத்திருப்பவர்களுக்கும், மேலே சிக்காகோவில் கர்த்தருடைய வருகைக்காக காத்திருப்பவர்களுக்ககாவும், கிழக்கு கரையில் நியூயார்க், கனெக்டிக்கட் என்னும் இடங்களிலும் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கும் பெரிய குழுக்களுக்ககாவும் வாழ்த்துக்களை அனுப்புகிறோம். மேலும் மலையில் உள்ள சகோ. ரட்டலுக்கும் கர்த்தருடைய வருகைகாக காத்திருக்கும் அவருடைய குழுவிற்கும் வாழ்த்துகளை அனுப்புகிறோம் என்கிறார். மேலும் இன்றிரவு வீட்டு சபையின், கூடாரத்தில் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கும் நாங்கள் கூடியுள்ளோம் என்கிறார். **(மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன? பத்தி 5, நாள் 25.07.1965).**

69. கோவை சகோ.ராஜா விசுவாசிக்கிறேன் என்று கூறும் தீர்க்கதரிசி 1965 ல் நாங்கள் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கிறோம் என்கிறார். மேலும் அவ்வாறாக காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு வாழ்த்துதல்களை 1965ல் கூறிக்

கொண்டிருக்கிறார். ஆனால் இவரோ 1963 முதல் கிறிஸ்து பூமியில் மணவாட்டியுடன் இருக்கிறார். அவர் மேலே இல்லை. இங்கே பூமியில் இருக்கிறார் என்கிறார். இது என்ன? எது பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட உபதேசம். எது பிசாசினால் கொடுக்கப்பட்ட உபதேசம் என்பதை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள். கள்ள கபடமுள்ள வேலையாள் 1963 ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்கிறார். ஆனால் தேவனுடைய தீர்க்கதரிசியோ 1965 நாம் அவருடைய வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார். பிசாசு அவர் வானத்தில் தோன்றுவார் என்று நீங்கள் ஏமாந்து போகாதீர்கள். அவர் இங்கே இருக்கிறார் என்கிறான். ஆனால் தேவனுடைய மனுஷனோ அவர் வர இருக்கிறார் அவருக்காக காத்திருக்கிறோம் அவர் வானத்தில் தோன்ற இருக்கிறார் என்கிறார். கர்த்தருடைய வருகை சடிதியாக இருக்குமென்றும் (மனவாட்டி) இரகசியமாக எடுத்துக்கொள்ளப்படுவாள் ஞாபகம் இருக்கட்டும். அவர் இரவில் திருடன் வருகிற விதமாய் வந்து அவளைக் கொண்டு செல்வார். (பதறல், பத்தி 55, நாள்: 01.09.1963) இப்பொழுது நீங்கள் யாரை விசுவாசிக்க போகிறீர்கள் என்பது உங்களுக்கடுத்த காரியம்.

70. இந்த செய்தி தொகுப்பில் ஸ்தாபன சபையின் ஞானஸ்நானத்திற்க்கடுத்த உபதேசம் தவறு என்றும் மேலும் கோவை. சகோ. ராஜாவின் ஐந்து கள்ள கபடமுள்ள போதனைகளை எடுத்துக் கூறி அவைகளும் தவறு என்பதை வேதவாக்கியங்களைக் கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியை கொண்டும் திருஷ்டாந்தப்படுத்தியுள்ளேன். இன்னும் இவருடைய தவறான போதனைகள் பல உண்டு. கர்த்தருக்கு சித்தமானால் காலப்போக்கில் அவைகளையும் குறித்து எழுதுவேன். அதுவரை கர்த்தருடைய சந்தோஷமும். சமாதானமும், உங்களனைவரோடுங்கூட அவருடைய வருகையின் பரியந்தம் இருப்பதாக. ஆமென்!

பிப்ரவரி, 2007.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ.காலேப் யோசுவா

## மற்றொரு நீதிமன்ற வழக்கா?

1. 20.01.07 அன்று நான் என் வீட்டில் இருக்கும்பொழுது சுமார் 12.20 மணியளவில் எனது மொபைலில் ஒரு கால் வந்தது. அழைப்பு 9840099004 எண்ணிலிருந்து வந்தது. பேசியவர் தன்னை குறித்து முடிவில் சொல்வதாக கூறி ஆரம்பத்திலிருந்தே என்னை கடிந்து கொள்ள ஆரம்பித்தார். அவருடைய வார்த்தைகளில் சில: நீயும் மகாத்மா அல்ல நானும் மகாத்மா அல்ல. நீ வெளியிடும் பத்திரிக்கைக்கு பணம் கொடுத்து உதவுகிறவர்கள் யார்? உன் உடம்பில் அழுக்கு. என் உடம்பிலும் அழுக்கு. ஆதலால் நீ அடுத்தவர்கள் மேல் உள்ள அழுக்கை பார்க்காதே. நீயும் தப்பு செய்கிறாய் நானும் தப்பு செய்கிறேன். உன் காலத்தையும் பணத்தையும் வீணாக்காதே. நீ இந்த பத்திரிக்கை வெளியிடுவதில் உனக்கு லாபம் என்ன? பைபிளை தியானி. உன் வேலைகளைப் பார். அடுத்தவர்கள் காரியத்தில் தலையிடாதே அவர்கள் எப்படியும் இருந்துவிட்டு போகிறார்கள், உனக்கென்ன? நான் இதுவரை உன்னை பார்த்ததில்லை. உன்னோடு பழகியதில்லை. உன் பத்திரிக்கை எனக்கு வருவதில்லை. நான் அதை படித்தும் இல்லை. ஆனால் உன்னை பற்றி சிலர் என்னிடம் கூறினார்கள். ஆதலால் உனக்கு இந்த போனை பண்ணினேன். நீ பிறரை பற்றி எழுதுவதை நான் விரும்பவில்லை. நீ இனிமேலும் பிறரை பற்றி எழுதினால் நானே உன் மீது நீதிமன்ற வழக்கு தொடருவேன்.

2. அவர் பேசும்பொழுது என்னை இடையில் எதுவும் பேசவிடாது அவரே பேசிக்கொண்டார். அவர் என் மீது நீதிமன்ற தொடரபோகிறேன் என்றவுடன் நீங்கள் தொடர்வதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. அதை சந்திப்பேன் என்றேன். உடனே தன் பெயர் காட்ஃபிரே (Godfrey) எனவும் தான் கோவூரில் வசிப்பதாகவும் கூறி தொடர்பை துண்டித்து விட்டார்.

3. பின் இவர் கோவூரில் யார் என்பதை விசாரித்தேன். இவர் முற்காலத்தில் பல்லாவரம் பாஸ்டர் தங்கமணி சபையில் இருந்ததாகவும், இந்நாட்களில் வளசரவாக்கம் சபை பாஸ்டர் சாமுவேல் சபைக்கு சென்று வருவதாகவும், பொழிச்சலூர் பாஸ்டர் டேனியல்ராஜ் உறவினர் எனவும், இவரது குடும்பத்தினர் அநேகர் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளார்கள் என அறிய வந்தேன். இவருடைய குடும்பத்தில் அநேகர் இக்காலத்துக்குரிய செய்தியில் இருந்து வளசரவாக்கம் சபைக்கு சென்றுவருகிறார்கள் என்று கேள்விப்பட்டு கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

4. சில மாதங்களுக்கு முன்பு பொன்னேரி சபையில் உள்ள சகோதரன் என்னை தனிமையில் அழைத்து என்னிடம் உங்கள் ஊழியம் சரியில்லை எனக்கூறி எனக்கு பல ஆலோசனைகள் கூறினார். நான் சகோதரனே என் ஊழியம் பற்றி ஏற்கனவே இரு செய்தித் தொகுப்புகள் எழுதியுள்ளேன். அதைப் படித்து விட்டு என்மீது தவறுகள் காணப்படுமாயின் வேதவாக்கியங்களைக் கொண்டு என்னிடம் கூறுங்கள். நான் என்னை திருத்திக் கொள்கிறேன் என்றேன். ஆனால் பல மாதங்கள் கழித்தும் அவரிடமிருந்து பதில் எதுவும் இல்லை, வரவும் வராது.

5. கடந்த பொங்கல் விடுமுறை நாட்களில் நுங்கம்பாக்கத்தில் இருந்து ஒரு சகோதரன் என்னை மதியம் உணவுக்கு அழைத்து என்னோடே சில மணி நேரங்கள் ஆவிக்குரிய காரியங்களை பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் சபைக்கடுத்த காரியங்களை பேசும்பொழுதும் தாம்பரம் – பொழிச்சலூர் பகுதிகளில் 10–12 சபைகள் உண்டு. நீங்கள் முன்பு எழுதியபடி இவைகள் யாவும் ஒன்றாக வேண்டும் என்றார். பொதுவாக இங்குள்ள பாஸ்டர்கள் 5/10 பேர்களை வைத்துக் கொண்டு சபை நடத்துவது சரியாக இல்லை எனக் கூறினார். இந்த பகுதிகளில் உள்ள சபைகள் அனைத்தும் மூடப்பட்டு ஒரே குடையின் கீழ் ஒரே மேய்ப்பன் தலைமையில் வளரவேண்டும் என்பதே என்னுடைய வாஞ்சையாயிருக்கிறது. தற்போது உள்ள மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள் அழைப்பு வேதவாக்கியங்களின்படி இல்லை என்று ஏற்கனவே எழுதியுள்ளேன். இந்த பகுதியில் ஒரு மாற்றம் வர ஜெபியுங்கள். இன்றைய மேய்ப்பர்கள் மண்சுவரை வைக்கிறார்கள். அவிசுவாசிகள் சாரமில்லா சாந்தை அதற்கு பூசுகிறார்கள். இதுதான் இந்த பகுதிகளில் உள்ள சபைகளின் இன்றைய நிலை. ஆனால் தேவனுடைய வித்துக்கள் அங்கு இருக்குமாயின் நிச்சயம் மாற்றம் வரும். குருடர்கள் இருப்பார்களாயின் நிச்சயம் மாற்றம் வராது.

6. முடிவாக காட்ஃபிரே சகோதரனை யாரோ தூண்டிவிட்டிருக்கிறார்கள். நான் எப்பொழுதும் ஊழியத்தின் பாதையில் வரும் அனைத்து எதிர்ப்புகளையும். எந்த நீதிமன்ற வழக்கையும் சந்திக்க ஆயத்தமாகவே இருந்து வருகிறேன். உங்கள் பாஸ்டர்களது முகத்திரைகள் கிழிக்கப்படவேண்டுமே! அப்பொழுது அவர்கள் யார் என்று உலகத்திற்கு வெளிப்படும். எனக்காக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அனுதினமும் ஜெபித்து வருகிறது, தேவனுடைய பிள்ளைகள் தங்கள் பணி ஸ்தலங்களில் கூடி தங்கள் கைகளோடுங்கூட தங்களுடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுத்து என்னையும் என் ஊழியத்தையும் தாங்குகிறார்கள் என்பதை அறிவேன். கர்த்தர் தமது வார்த்தையிலே என் கால்களை நிலைப்படுத்தி. உறுதிப்படுத்தி எனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயதமும் வாய்க்காதே போகும்படி இம்மட்டும் காத்துக் கொண்டு வருகிறார். இனிமேலும் காத்துக் கொள்ள எனக்கு போதுமானவராகவும் இருக்கிறார். ஆமென்! அல்லேலூயா!!

சகோ.காலேப் யோசுவா